---


தாயுமானவரும் மகான்களும்
மன்னார்குடி பானுகுமார்.

# தாயுமானவரும் மகான்களும்

“தெளிவு குருவின் திருமேனி காண்டல்

தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்

தெளிவு குருவின் திருநாமம் செப்பல்

தெளிவு குருவுரு சித்தித்தல் தானே” (திருமூலர்)

தெளிவு என்பது சீரிய சிந்தனையின் விளைவு. பாரதியார் அறிவிலே தெளிவு, அகத்திலே அன்பினோர் வெள்ளம் என்றார்.

அணுவைப் பிளக்க முடியாது என்ற அறிவியல் கருத்து “பிளக்க முடியும்” என்ற அடுத்த வந்த கருத்தில் மாற்றம் பெற்றது.

தெளிவு சிந்ததனையின் சிகரமாக ஞானத் தெளிவை வழங்கியுள்ளார் நமது தாயுமானவர்.

தாயுமானவர் அருளிய பாடல்களில் இறைநெறியும்,அறநெறியும் இரு கைகளிலும் எடுத்து அனைவருக்கும் வாரி வாரி வழங்கியர் தத்துவ ஞானியார் தாயுமானவர்.

சுருக்கமாகச் சொன்னால், தாயுமானவர் தத்துவம் என்பது இறைநிலையின் இன்னொரு பக்கமாக இக்கும் மனிதனை--- இல்லை…இல்லை…மனிதனின் மறுபக்கமாகவே இருக்கும் இறைநிலையைத் தெளிவுப்படுத்துகிறது.

---

மகான் தாயுமானவரிடம் பல மாகன்களின் சாயல்களை நாம் காண்கிறோம்.

தனக்கு முன் வாழ்ந்த சமயக் குருவர்கள் பலரை அடியார் வணக்கம் என்ற பகுதியில் சுட்டுகின்றார் தாயுமானவர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், பத்திரகிரியார், திருமூலர், அருணகிரியார், சுகதேவர் போன்றோரைக் குறிப்பிடுவதிலிருந்து இவர் போற்றுகின்ற பாவாணரையும், அவர் கூறும் கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்ற தன்மையினையும் நாம் உணருகின்றோம்.

## தாயுமானவரும் சனகாதி முனிவர்களும்

"நீதியாய், கல்ஆலின் நீழலின் கீழே இருந்து

போதியா உண்மை எல்லாம் போதித்தான். - ஏதில்

சனகாதி ஆய தவத்தேர்க்கு ஞான

தினகரன் ஆம் மௌன சிவன். (தா.பா. 509 உடல்பொய்யுறவு 50)

குற்றமற்ற **சனகன்** முதலிய நான்கு முனிவர்களுக்கு, ஞான சூரியனாக விளக்கும் மோன நிலையில் இருந்த சிவபெருமான் முறைப்படி கல்லால மரநிழலில் இருந்து, போதிக முடியாத உண்மைகளை எல்லாம் போதித்து, அருள் செய்தான்.

தாயுமானவர் சனகாதி முனிவர்களைப் பற்றி "அடியார் வணக்கம் " என்ற பிரிவில் பாடியுள்ளார்.

"குற்றமற்ற சனகன் முதலிய நான்கு முனிவர்களுக்கு, ஞான சூரியனாக விளங்கும் மோன நிலையில் இருந்த சிவபெருமான்

முறைப்படி கல்லால மரநிழலில் இருந்து போதித்க முடியாத உண்மைகளை எல்லாம் போதித்து, அருள் செய்தான்.

## தாயுமானவரும் அருணகிரிநாதரும்

"ஐயா, அருணகிரி அப்பா உனைப்போல

மெய்ஆக ஓர்சொல் விளம்பினர் யார்? - வையகத்தோர்

சாற்றரிதுஎன்று ஏசற்றார் தன் அனையாய், முக்கண்எந்தை

நான்றிசைக்கும் கைகாட்டினான்." (தா.பா.485 உடல்பொய்யுறவு 26)

"ஐயனே! அருணகிரி அப்பனே! உன்னைப் போல உண்மையாக ஒரு சொல்லால் உபதேசம் செய்தவர் யார் உளர்? உலகத்தார் இதுபோன்றதொரு உபசேம் சொல்ல அரியது எனச் சோர்ந்து போனார்." என்று அருணகிரிநாதரைப் பார்த்து வியக்கிறார் தாயுமானவர்.

கந்தர் அநுபூதி **பெற்றுக் கந்தர்** அநுபூதி **சொன்ன**

**எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ?"**

**முருகப் பெருமானுடைய திருவருளைப் பெற்று, கந்தர்** அநுபூதி **என்னும் நூலைப் பாடி அருளிய, எம் தந்தை அருணகிரி நாதனின் அருளை விரும்பி இருக்கும் நாள், எந்நாளே?**

## தாயுமானவரும் திருஞானசம்பந்தரும்

"வெம்பந்தம் தீர்த்து உலகுஆள் வேந்தன் திருஞான

சம்பந்தனை அருளால் சாருநாள் எந்நாளோ?"(பா.1107 அடியார் வணக்கம் 1)

கொடிய பிறவிப் பணிப்பை அறுத்து. உலகவரை ஆண்டு அருள் செய்த திருஞான சம்பந்தப் பிள்ளையை அடையும்

---

தாயுமானவரும் சுந்தரரும்

“பித்தர்இறை என்று அறிந்து பேதைபால் தூது அனுப்புவித்த
தமிழச்சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ?” (பா 1109 அடியார் வணக்கம் 3)

இறைவனைப் பித்தன் என்று அறிந்து, தன் மனைவியிடம் தூது அனுப்பிய தமிழ்வல்லார் சுத்தரமூர்த்தி சுவாமிகளது உண்மை அன்பைப் புகழந்து பேசுவது எப்பொழுதோ?

தாயுமானவரும் மாணிக்கவாசகர்,

“போதவூர் நாடுஅறியப் புத்தர்தமை வாதில்வென்ற

வாதவூர் ஐயன்அன்பை வாஞ்சிப்பது எந்நாளோ?” (பா.110 அடியார் வணக்கம் 4)

ஞானநெறி இப்படிப்பட்டது என நாடறியச் செய்ய, பத்தர்களை வாதில் வென்ற திருவாவூர்த் தலைவன் மாணிக்கவாசகனது அன்பை விரும்புவது எந்நாளோ?”

தாயுமானவர் மாணிக்கவாசகரைப் பற்றி “அடியார் வணக்கம் “ என்ற பிரிவில் பாடியுள்ளார். “ஞானநெறி இப்படிப்பட்டது என நாடறியச் செய்ய, பத்தர்களை வாதில் வென்ற திருவாவூர்த் தலைவன் மாணிக்கவாசகனது அன்பை விரும்புவது எந்நாளோ?” “என்று ஏங்குகிறார்.

தாயுமானவரும் பட்டினத்தாரும்

“பார் அனைத்தும் பொய் எனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல்

ஆரும் துறக்கை அரிது அதிது. - நேரே

மனத்துறவம் அப்படியே. மாணா! இவற்றில்

உனக்கு இசைந்தவாறு ஒன்றே ஓர்” (தா.பா.516 -உடல்பொய்யுறவு 57)

"இந்த உலகம் அனைத்தும் பொய் என்று உணர்ந்து, பட்டினத்தடிகள் துறவு மேற்கொண்டதுபோல புறப்பொருளை ஏனையோர் துறத்தல் மிகவும் அரிது " என்று பட்டினத்தார் துறவை பார்த்து அகமகிழ்கிறார் தாயுமானவர்.

"கந்தர் **அநுபூதி பெற்றுக் கந்தர்** அநுபூதி **சொன்ன**

**எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ?"(தா.பா.1114 - அடியார் வணக்கம் பா.8)**

**"முருகப் பெருமானுடைய திருவருளைப் பெற்று. கந்தர்** அநுபூதி **என்னும் நூலைப் பாடி அருளிய, எம் தந்தை அருணகிரி நாதனின் அருளை விரும்பி இருக்கும் நாள், எந்நாளே?" என்று அருணகிரியாரைப் பார்த்து வியக்கிறார் தாயுமானவர்.**

தாயுமானவரும் பத்திரகிரியார்,

"ஒட்டுடடன்பற்று இன்றி உலகைத துறந்தசெல்வப்

பட்டினத்தார் பத்தரகிரி பண்பு உணர்வது எந்நாளோ? பா.111 அடியார் வணக்கம் 5

யாரோடும் ஒட்டுதலின்றி, உலகப் பொருள்கள்மீது பற்றும் இன்றி, உலகைத் துறந்த செல்வந்தர்களாகிய பட்டினத்தார், பத்திரகிரியார் ஆகியோரது பண்பினை உணரும் நாள், எந்நாளோ?

தாயுமானவர் பட்டினத்தார் பத்திரகிரியாரைப் பற்றி "அடியார் வணக்கம் " என்ற பிரிவில் பாடியுள்ளார்.

யாரோடும் ஒட்டுதலின்றி, உலகப் பொருள்கள்மீது பற்றும் இன்றி, உலகைத் துறந்த செல்வந்தர்களாகிய பட்டினத்தார், பத்திரகிரியார்

----------------------------------------------------------------------------------------------------------------------

ஆகியோரது பண்பினை உணரும் நாள், எந்நாளோ? “ என்று ஏங்குகிறார்.

### தாயுமானவரும் திருநாவுக்கரசரும்

“அவனன்றி யோரணுவும் அசையா” தெனும் பெரிய

ஆப்தர்மொழி யொன்று கண்டால்”

என்று அப்பரைப் போற்றுகிறார் தாயுமானவர்.

“ஆட்டுவித்தால் ஆரோருவர் ஆடா தாரே அடங்குவித்தால் ஆரொருவர் அடங்கா தாரே” என்ற அப்பர் பாடலின் கருத்தை தாயுமானவர் எடுத்தாண்டுள்ளார்.

### தாயுமானவரும் திருமூலரும்.

“சக்கரவர்த்தி தவராஜ யோகிஎனும்

மிக்கதிரு மூலன்அரள் மேவுநாள் எந்நாளோ? (பா 1113 அடியார் வணக்கம் பா.7.)

“தவராஜ யோகிகளுள்ளும் சிறந்து விளங்கிஎ அரசர் என்னுமாறு யோகிகளுக்கெல்லாம் மேலாம் யோகி என்னும்படி பெருமை பெற்ற) திருமூல நாயனாரது அருளைப் பொருந்தும் நாள் , எந்நாளோ?” என்று திருமூலரைப் பாராட்டுகிறார் தாயுமானவர்.

### தாயுமானவரும் மௌனகுருவும்.

“மந்தர குருவே யோக தந்த்ர குருவே மூலன்

மரவில் வரும் மௌன குருவே. (மௌன குரு.பா.37-46)

---

தாயுமானவர் தமது குருவான மௌனகுருவைப் பற்றி "மௌனகுரு வணக்கம்" என்ற பிரிவில் பத்துபாடல்களைப் பாடியுள்ளார்.

"மந்திர குருவே! யோக தந்திர குருவே! திருமூலரது பரம்பரையில் வந்த மௌனகுருவே" என்று தமது குருவின் பெருமையை ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் போற்றி மகிழ்கிறார்.

"மௌன குரு வணக்கம் முதல் பாட்டிலே. மௌனகுருவே! என்னையொரு அறிவு மதங்கொண்டு யானையாக வளர்த்தனை. எவ்வாறெனில்....

- ஆசையாகிய விலங்கினைப் பொடிபடும்படி உதறி ஆங்காரமாகிய முளையைப் பிடுங்கியெறிந்து
- இரண்டமை விழைதல் என்னும் மதங்கொண்டு ஆறு சமயமும், ஆறுபோலத் துதிக்கை பொழி நீராகவும் அமைய,
- பாசமாகிய இருளைத் தன்னிழல் என்று கருதிச் சினம் ஆரவாரம் செய்து,
- மேலே பார்த்த பெருமித நோக்குடன், பரந்து செல்லும் மனத்தைப் பெரியதோர் கவளமாக நிரம்ப உண்டு,
- முகத்தில் போர்த்த துணி போன்ற மாயையினைக் கிழித்து எறிந்து,
- அறிவாகிய ஒளியோடு கூடிய உனது செவ்விய கையில் பிடித்த சின்முத்திரையாகிய தோட்டி வசமாய் அடக்கிப் பேரறிவானந்தப் பெரு வெள்ளத்தில் திளைத்தது
- நின் திருவருளின் இறைவாகிய நன்னய வாசத்தில் உலவும்படி செய்தனை."

## உதாரணப் புருஷர்களாக ஒரு உவமை பாடல்

- பேரானந்தப் பெருங்கடலிலிருந்து வீசிய காற்று பட்டதும் நாரதர் தம்மை மறந்து பக்திப்பரவசமடைந்தார்.

---

- எப்பொழுதும் "நாராயண, நாராயண" என்று உச்சரித்த வண்ணம் ஆனந்தத்தில் மூழ்கி இருந்தார்.
- சுகர் பேரானந்தக் கடலைப் பார்த்தார். பார்த்தவுடன் உடல் உணர்வை எல்லாம் கடந்து ஞானப் பெருநிலையை அடைந்து விட்டார்.
- மகாதேவர் அப் பேரானந்த கடலின் நீரை ஒருகை அள்ளிப் பருகினார். அது அவருக்கு போதுமானதாகப் போய்விட்டது.

## தாயுமானவரின் அந்தப் பாடல்

_(சுகவாரி 23 - தா.பா.154.)

அதுநறால் எதுஎன ஒன்று அடுக்கும் சங்கை
 ஆதலினால் அது எனலும் அறவே விட்டு
மது உண்ட வண்டு எனவுஞ் சனகன் ஆதி
 மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தார் என்றும்
பதி இந்த நிலை எனவும் என்னை ஆண்ட
 படிக்கு, நிர் விகற்பத்தால் பரமா னந்தக்
கதிகண்டு கொள்ளவும்நின் அருள்கூ ர். இந்தக்
 கதியன்றி உறங்கேன். மேற் கருமம் பாரேன்.

இந்தப் பாடலில் -சராணகதி அடைந்தபின் இறையின்பம் கிடைக்கும் என்பதை பதிவு செய்கிறார்.

சனகர், சுகர் முதலியவர்களை உதாரணப் புருஷர்களாக ஒரு உவமை மூலம் தருகிறார் தாயுமானவர்.

சுகதேவர், சுகதேவ கோசுவாமி என அழைக்கப்படுபவர். வேதங்களை நான்காகப் பகுத்தவரும் பாகவதம் எனப்படும் புராணத்தை எழுதியவருமான வியாச முனிவரின் புதல்வன் ஆவார்.

மகாபாரதத்தில் வரும் அர்ஜுனனின் பேரனான பரிட்சித்து மன்னன், தட்சகனால் கடிபட்டு இறக்கும் தறுவாயில் அவனுக்கு பாகவதத்தை உபதேசித்தார்.

இவர் அத்வைத இருடிகளின் மரபு வழியில் வந்த ஐந்தாவது இருடி ஆவார். சீவ முக்தி எனப்படும் துறவு நிலையை அடைந்தவர்.

பல மகான்களை தாயுமானவர் அடையாளம் காட்டினாலும் இவரை அடையாளம் காட்டுகிற பல புதிய புரட்சி கருத்துக்களும் இவரிடம் உண்டு.

எது தெய்வம்? என்ற நமது கேள்விக்கு பதில் அளிப்பதோடு, அந்த தெய்வத்தின் விலாசத்தையும் அல்லவா மானுடத்திற்கு தந்துள்ளார் நமது தாயுமானவர்.

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்திஆகி,
அருளொடு நிறைந்தது எது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்

தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகள் எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம் என்று

எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?

---

எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல் ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது? மேல்

கங்குல்பகல் அறநின்ற எல்லை உளது எது? அது
கருத்திற்கு இசைந்தது அதுவே.
கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம் (திருவருள் 1)

மெய்ப்பொருள் என்ற கடவுள் எங்கிருக்கிறார் என்ற ஆறு கேள்விகளை நம்மிடமே வைக்கிறார் தாயுமானவர்.

1. **அங்கு எங்கு என்று சொல்ல முடியாதபடி, அண்டவெளி முழுவதும் எங்கும் நிறைந்து விளங்கும் ஒளிமயமாகி. உயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும் நிறைவான ஒன்றாகி, தனது திருவருளாகிய சக்தியோடு கூடி, எங்குமாய் நிறைந்து நின்ற பொருள் எது?**
2. **தனது திருவருளாக விளங்கும் ஆகாயத்தின்கண் அண்ட கோடிகள் அனைத்தும் தங்குமாறு விரும்பி இடம் கொடுத்து, உயிருக்கு உயிராய் நின்று, அவ்வுயிர்களைத் தழைக்கச் செய்தது எது?**
3. **மனத்துக்கும் வாக்குக்கும் தட்டுப்படாமல் நின்றது எது?**
4. **சமயகோடிகள் பலவும், “இது எங்கள் தெய்வம், இது எங்கள் தெய்வம்!” என்று எவ்விடத்தும் தங்களுக்குள் தொடர்ந்து எதிர்வழக்கு ஆடும்படி செய்த பொருள் எது?**
5. **எல்லா இடங்களிலும் பேசப்படுவதும், எல்லாப் பொருள்களையும் இயக்கும் அறிவாய் விளங்குவதும், உயிர்களுக்கு இன்பப் பேற்றினை வழங்குவதும் எல்லா காலத்திலும் நிலைத்து நிற்பதும், ஆகிய பொருள் எது?**

---

6. **மேலான இரவுபகல் அற்ற எல்லையில் உள்ள பொருள் எது?**

இந்த ஆறு கேள்விகளுக்கும் தாயுமானவரே பதிலும் சொல்கிறார்.

- எது?எது? எது? என்ற கேட்ட - அந்த அது - நம்முடைய கருத்திற்கு இசைந்தபொருளே.
- அந்தப் பொருளையே கண்ணால் காணும் பொருள்கள் அனைத்துமாகவும், மௌனமே உருவமான வெளியாகவும் (வெட்டவெளியாகவும், சுத்தவெளியாகவும். அருள்வெளியாகவும், தூய ஒளியாகவும்) நினைத்து வணங்குதல் செய்வோம்.

வெளி என்றால் என்ன? விடையாக வருகிறார் வேதாத்திரி மகரிஷி.

“வற்றாயிருப்பு, பேராற்றல், பேறறிவு, காலம் எனும் வளம் நான்கும்
ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம்” என்கிறார்.

“அருட்பெருவெளியில் அருட்பெருவுலகத்து

அருட்பெரும் தலத்து மேல் நிலையில்

அருட்பெருஞ் ஜோதி என்னரசே?

தாயுமானவரும், வள்ளலாரும், வேதாத்திரியாரும் ஒரே மூலத்திலிருந்து மலர்ந்ததுதான் அனைத்தும் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தினார்கள்.

அந்த மூலத்தை பெருவெளி என்றார் வேதாத்திரியார்.

அருட்பெருஞ்ஜோதி என்றார் வள்ளலார்.

அருள்வெளி என்றார் தாயுமானவர்.

## தாயுமானவரும் பாரதியாரும்

"என்றும் இருக்க உளம்கொண்டாய் --இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்

இன்றும் இருத்தல் செய்கின்றாய்இறவாய் தமிழோடு இருப்பாய் நீ!

'ஒன்று பொருள்; அ஁து இன்பம்' என உணர்ந்தாய்–தாயுமானவனே

நின்ற பரத்து மாத்திரமோநில்லா இகத்தும் நிற்பாய் நீ!" பாரதியார்

பாரதி, தனது பகவத் கீதை உரையினில், தாயுமானவரை மேற்கோள் காட்டுகிறார். பாரதி தனது 'ஆனந்தக் களிப்புச் சந்தத்திற்கு' 'தாயுமானவர் ஆனந்தக் களிப்புச் சந்தம்' என்றே பெயர் இடுகிறார் பாரதி.

தேமாச் சீரில் முடியும் 'வந்த மாதரம் என்போம்', 'தாயின் மணிக்கொடி பாரீர்' போன்றவை இச்சந்தத்தில் வரும்.

தாயுமானவர் அடியார் வணக்கம் என்ற பகுதியில் திருமூலர், திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர். சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்தார், பத்திரகிரியார், திருமூலர், அருணகிரியார் போன்றோரைக் குறிப்பிடுவதிலிருந்து இவர் போற்றுகின்ற பாவாணரையும், அவர் கூறும் கருத்துக்களை ஏற்றுக் கொள்கின்ற தன்மையினையும் நாம் உணருகின்றோம்.

அனைவரும் வாழ்க வளமுடன்

திக்கெட்டும் பரவட்டும் தாயுமானவர் புகழ்.